

மதுரையில் வரும் 15ஆம் தேதி கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைக்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரலாறு காணாத வகையில் 15 கிலோமீட்டர் தூரம் மாபெரும் வரவேற்பு கொடுக்கும் வகையில் மதுரை வடக்கு மதுரை மாநகர் மதுரை தெற்கு மாவட்ட செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு. மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் சிறப்புரை ஆற்றிய போது எடுத்த படம். உடன் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ. வேலுச்சாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ குழந்தைவேலு, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ. வெங்கடேசன் அவைத் தலைவர்கள் ஒச்சு பாலு, எம் ஆர் எம் பாலசுப்பிரமணியன், நாகராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் 23 மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும்..!

சென்னை, ஜூலை 4-

தமிழகத்தில் 23 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில் மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் மேல் வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. மேலும் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பல்வேறு மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தென்மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், அடுத்த 3 மணி நேரத்தில் சென்னை உள்ளிட்ட 23 மாவட்டங்களில் லேசான/மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (02.07.2023) திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி விடுதியில் மாணவியரை சந்தித்து விடுதியிலுள்ள அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்ததோடு தேவையான கூடுதல் வசதிகளை செய்து தந்திட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கா.ப. கார்த்திகேயன், சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன், மண்டல் இணை ஆணையர் திருமதி கவிதா பிரியதர்ஷினி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டம் - சூராணம் - சாலை கிராமத்தில்

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டங்கள்!

### கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - தக்கோலம் சிவபாலன் சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 4-

சிவகங்கை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகிறது இதில் இளையான்குடி கிழக்கு ஒன்றியம் சார்பில் சூராணத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் வே.தமிழ் மாறன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் மாநில இலக்கிய அணி புரவலரும், முன்னாள் அமைச்சருமான மு.தென்னவன் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன் தலைமைக் கழக பேச்சாளர்கள் தக்கோலம் சிவபாலன், அனல் அய்யாசாமி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் சிவ.முத்துவளவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சுப.மதியரசன், மாரியப்பன் கென்னடி, ஒன்றிய கழக நிர்வாகிகள் ரகுநாதன், கோபி, கண்ணன், குருசாமி, ராஜேந்திரன், இளைஞர் அணி சிவகுமார், மாணவரணி திவாகர், மகளிரணி சகாயம்மேரி ராஜா, உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக ஜான் போஸ்கோ வரவேற்றுப் பேசினார்.

பொருளாளர் ஆரோக்கியதாஸ் நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வே.தமிழ் மாறன் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள் .

இளையான்குடி தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் சாலைக் கிராமத்தில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆறு. செல்வராஜன் தலைமையில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன்,மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன், தலைமைக் கழக பேச்சாளர்கள் தக்கோலம் சிவபாலன், அனல் அய்யாச்சாமி, ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், ஒன்றிய கழக செயலாளர்கள் வே. தமிழ்மாறன், கா.வெங்கட்ராமன், நிர்வாகிகள் மலை ரவிச்சந்திரன், செல்வி சாத்தையா, நைனா முகமது, திலகர், வே.கருணாகரன், சேவியர், சாமிவேல், டி. எம்.ஏ.யாசின், கான்முகமது, சேவியர், தயாளன் உட்பட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இளையான்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு.செல்வராசன் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

### நெல்லை மாநகர தி.மு.க. சார்பில்

## 100 கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்!

நெல்லை.ஜூலை.4-

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை டவுண் லட்சுமி மஹாலில் 100 கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி பங்கேற்று பொற்கிழி வழங்கினார்.

பின்னர் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை ஓராண்டு கொண்டாட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள். அதன்படி நெல்லை மாநகர திமுக சார்பில் 100 கழக மூத்த முன்னோடி களுக்கு பொற்கிழியுடன் கலைஞர் சிலையும் வழங்கப்பட்டுள்ளது. தமிழக முழுவதும் பொற்கிழி வழங்கும் திட்டம் விரைவில் தொடங்கும். எத்தனை அரசியல் பூபங்கள் வந்தாலும், எத்தனை மோடிகள் வந்தாலும், எத்தனை அண்ணாமலை வந்தாலும், அவர்களது திட்டங்களை தவிடு பொடியாக்கும் தொண்டர்கள் தி.மு.க.வில் உள்ளனர். மராட்டிய மாநிலத்தில் நடக்கும் சம்பவத்தை பார்க்கும் போது, பாட்னா எதிர்க்கட்சி கூட்டத்தைக் கண்டு மோடி பயந்து விட்டார் என்பது தெரிகிறது.

மகாராஷ்டிராவில் கேவலமான விளையாட்டை பா.ஜ.க.விளையாடி வருகின்றனர். மோடியின் கவுண்டவுன் ஸ்டார்ட் ஆகிவிட்டது.மராட்டியம் சிவாஜி பிறந்த மண்.கர்நாடகத்தில் பா.ஜ.க. தோல்வியை தழுவியது போல் மராட்டிய மாநிலத்திலும் 2024 ல் மிகப்பெரிய தோல்வியை சந்திக்கும்.அண்ணாமலை ஒரு பொருட்டே கிடையாது. தமிழக அரசியல் பற்றி என்ன தெரியும். நாகர்கோவில் நடந்த கூட்டத்தில் காமராஜர் குறித்தும் அண்ணாமலை பேசியுள்ளார். குடியாத்தம் தேர்தல் முதல் காமராஜர் அடக்கம் வரை தி.மு.க அனைத்து உதவிகளையும் காமராஜருக்கு செய்துள்ளது.தமிழக ஆளுநர் தொடர்ந்து சனாதனம் குறித்து பேசி வருகிறார். தமிழகம் பெரியார் பிறந்த மண், அண்ணாவால் வளர்த்த மண்,கலைஞரால் பாதுகாப்பட்ட மண். இங்கு சனாதனத்திற்கு கடுகளவும் இடம் கிடையாது.

இவ்வாறு கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி தெரிவித்தார்.

அப்போது நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், நெல்லை மாநகர செயலாளர் சுப்பிரமணியன்,மாநில வர்த்தக அணி இணைசெயலாளர் மாலைராஜா,மேயர் சரவணன்,உள்பட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.



கழகத் தலைவர் - முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு நபர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர். இதனை அறிந்த இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., நேரில் சென்று இறந்த இரு நபரின் குடும்பத்தினரிடம் ஆறுதல் கூறியதுடன் சொந்த நிதியிலிருந்து நிதி வழங்கினார். உடன் ராமேஸ்வரம் நகர்மன்ற தலைவர் நாசர் கான், துணைத் தலைவர் பிச்சை என்ற தக்ஷிணாமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### சங்கரன்கோவில் பணிமனையில் ரூ.40 லட்சம் மதிப்பில்

## தொழிலாளர் ஓய்வு அறை - பேருந்து சுத்தம் செய்யும் இயந்திரம் நிறுவும் பணி!

### அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்!

நெல்லை ஜூலை. 4-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பணிமனையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) சார்பில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் தொழிலாளர் ஓய்வு அறை முதல் தளம் கட்டும் பணி மற்றும் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 15 லட்சம் மதிப்பில் தானியங்கி பேருந்து சுத்தம் செய்யும் இயந்திரம் நிறுவும் பணி என மொத்தம் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா மாவட்ட ஆட்சியர் துரை. இரவிச்சந்திரன் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார் எம்.பி.ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் திருநெல்வேலி இரா. மோகன் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்று தொழிலாளர் ஓய்வு அறை முதல் தளம் கட்டும் பணி மற்றும் தானியங்கி பேருந்து சுத்தம் செய்யும் இயந்திரம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதாவது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சங்கரன் கோவில் பணிமனையில்

சட்டமன்ற உறுப்பினர் ராஜா நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் நிதியிலிருந்தும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் போக்குவரத்து துறை மானிய கோரிக்கையின் போது 10 க்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி நிதியில் இருந்து போக்குவரத்து துறைக்கு அடிப்படை பணிகளுக்கு நிதி ஒதுக்கினார்கள்.

அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்தேன். அப்போது சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா சங்கரன்கோவில் போக்குவரத்து தொழிலாளர்கள் ஓய்வு அறை மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் என வலியுறுத்தினார். அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ததின் பலனாக இன்று பணிகள் துவங்கப்பட்டுள்ளது.வாசு தேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.சதன் திருமலைகுமார் புளியங்குடி போக்குவரத்து கழக பணிமனைக்கு நிதி ஒதுக்கி தருவதாக கூறியுள்ளார்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மிகப் பெரும் சீரழிவை சந்தித்த போக்குவரத்து கழகம்.தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் சீரழிவில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து திட்டத்தின் மூலம் ஏற்படும் நஷ்டத்திற்கான தொகையை கடந்த ஆண்டு ரூபாய் 1800 கோடியும் இந்த ஆண்டு 2800 கோடியும் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு முதலமைச்சர் அவர்கள் கொடுத்துள்ளார்கள்.

அதனால் தொழிலாளர்களுக்கு பிரச்சினை இல்லாமல் சம்பளம் போடப்படுகிறது.கேரள மாநிலத்தில் 15 நாட்கள் முதல் 30 நாட்களுக்கு மேல் காலதாமதமாக சம்பளம் வழங்கப்படுகிறது.ஆனால் நாம் 1ம் தேதியே சம்பளம் போட்டு விடுகிறோம்.அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் மகளிர் கட்டணமில்லா பயணத் திட்டம் அறிவித்ததன் காரணமே.கடந்த 10 ஆண்டுகள் அ.தி.மு.க. ஆட்சியில் புதிய ஓட்டுநர்,நடத்துனர் நியமிக்கவில்லை.

முதலமைச்சர் அவர்கள் முதல் முறையாக அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கும் கும்பகோணம் அரசு போக்குவரத்து கழகத்திற்கும் புதிய ஓட்டுனர் நடத்துனர் பணியிடங்களை நிரப்ப ஆணை பிறப்பித்துள்ளார்கள். இன்னும் சில மாதங்களில் அனைத்து பணிமனைகளிலும் காலியிடங்கள் நிரப்ப முதலமைச்சர் அவர்கள் விரைவில் அறிவிப்பு வெளியிடுவார்கள்

அதனால் கடுமையாக உழைக்கின்ற நமது தொழிலாளர்களுக்கு அந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடுகிற சூழ்நிலை ஏற்படும். 2006 முதல் 2011 வரை முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் 15000,ம் பேருந்துகள் வாங்கப்பட்டது. ஆனால் கடந்த 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 14000 பேருந்துகள் மட்டுமே வாங்கப்பட்டது.

இப்போது தமிழ்நாடு அரசு மாநில அரசு நிதியில் இருந்து 2000 பேருந்துகள் வாங்க டெண்டர் விடக்கூடிய பணிகள் நடைபெற்று வருகிறது. மற்றும் ஜெர்மன் வங்கி நிதி மூலம் புதிய பேருந்துகள் சில மாதங்களில் வாங்க டெண்டர் பணி துவங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் மறுமலர்ச்சி அடைவதை கண்கூடாக பார்க்க முடியும்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2000 பேருந்துகள் நிறுத்தப்பட்டன அதற்கு அவர்கள் கொரோனாவை காரணம் காட்டினார்கள். ஆனால் பணியாளர்கள் இல்லாததால் அந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டது இங்கு எம்.எல்.ஏ.க்கள் எம்.பி. பொதுமக்கள் வைத்த கோரிக்கை அனைத்தும் விரைவில் சரி செய்யப்படும்.போக்குவரத்து துறையில் முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை அறிவித்து வரும் நிலையில் போக்குவரத்து பணியாளர்களும் தங்கள் பணிகளை சிறப்பாக செய்ய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேசினார்.

இந்நிகழ்வில் சதன் திருமலைகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் தமிழ்ச்செல்வி, சங்கரன்கோவில் ஒன்றிய குழு தலைவர் லாலாசங்கரபாண்டியன்,நகர் மன்ற தலைவர் உமாமகேஸ்வரி,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், பரமகுரு, மாவட்ட அவை தலைவர் பத்மநாதன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துசெல்வி,மாவட்ட துணை செயலாளர்கள் புனிதா, ராஜதுரை, மாவட்ட பொருளாளர்கள் ஷெரிப், சரவணன்,ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, வெற்றி விஜயன், பெரிய துரை, சேர்மதுரை, கிறிஸ்டோபர், மதிமாரிமுத்து, ராமச்சந்திரன்,திவான் ஒலி,நகர செயலாளர் மு.பிரகாஷ், அவை தலைவர் முப்புடாதி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் சந்திரன்,அப்பாஸ் அலி, முத்துகிருஷ்ணன், தொ. மு.ச.தர்மன், மைக்கேல் நெல்சன்,சங்கர் ராஜ், குருசாமி,செந்தில்குமார்,வீரகுமாரன், மாரிசாமி, திருப்பதி, கிறிஸ்டோபர், ஸ்தோவான்,அரசு போக்குவரத்து கழக வணிகத்துறை மேலாளர்கள் சுப்பிர மணியன், சண்முகையா, சங்கரன்கோவில் பணிமனை கிளை மேலாளர் குமார் உள்பட கழகத்தினர் போக்குவரத்து ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் அரசு போக்குவரத்து கழகம் திருநெல்வேலி பொது மேலாளர் வே.சரவணன் நன்றி உரையாற்றினார்.




தேனி வடக்கு மாவட்டம் தேனி ஊராட்சி ஒன்றியம் ஊஞ்சாம்பட்டிஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தில் புதிய பொது விநியோகடை சரவணகுமார் எம். எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் வடக்கு ஒன்றிய செயலாளர் தேனி யூனியன் சேர்மன் சக்கரவர்த்தி, ஊஞ்சாம்பட்டி கிளைச் செயலாளர் ஹரி பிரசாத், மாவட்ட பிரதிநிதி சரவணன், கவுன்சிலர் சதீஷ், இளைஞர் அணி பரணி மற்றும் அரசு அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கிருஷ்ணன்

### ஜூலை 4 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

மாதவரத்தில் நாற்பது ஆண்டுகள் வட்டச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.